[திரு. எ.வ. வேலு] [*2021 செப்டம்பர் 1*

ஏற்பட்டுள்ளதன் விளைவாக, அதில் crack *இருந்து, அதன் மூலமாக* pipe-*ல் போகின்ற* oil, leakage *ஆன காரணத்தினால், அதன் உறுதித் தன்மையை அது இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சாதாரண கூலிவேலை செய்கின்ற ஆட்கள் தான் இந்தப் பணியை அங்கே மேற்கொண்டிருக்கிறார்கள்.*

பொதுவாக, இதுபோன்ற பணிகளில் ஈடுபடுகின்றபோது safety *என்கின்ற அடிப்படையில்தான், ஜெய்ப்பூரைச் சேர்ந்த* ETMA *என்கின்ற அந்த நிறுவனம்தான் அதைப் பார்த்திருக்க வேண்டும். ஆனால், சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் யாருமே அங்கேயில்லை என்கின்ற நிலை இருந்தது. அந்த அடிப்படையில் இந்த விபத்து எப்படி நடந்திருக்கின்றது என்பதை ஆராய்ந்து, அதற்கு* report *கொடுப்பதற்காக திருச்சி* NIT-*ஐச் சேர்ந்த* Dr. K. Baskar *தலைமையில்,* Dr. Samson Mathew, Shri Alok Bhowmick, *மாவட்ட ஆட்சித் தலைவர் என 4 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அரசின் சார்பாக கட்டளையிட்டிருக்கிறோம். அந்தக் குழுவின் பரிந்துரையைப் பெற்றபின்புதான், அதன்மீது மேல் நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.*

முற்பகல் 10-55

இந்த நிலையில், அந்த கம்பெனியின்மீது இன்றைக்கு வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. மதுரை தல்லாகுளம் காவல் நிலையத்தில் FIR No. *971,* Section *287, 304*A *என்ற அடிப்படையில்* FIR *போடப்பட்டு, வழக்கும் அங்கே தொடரப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், இதுசம்பந்தமாக நான்* report *கொடுத்திருக்கிறேன். அவரும் அதைப் படித்துப் பார்த்திருக்கிறார். மேல் நடவடிக்கை எடுப்பதற்கு* NHAI-*னுடைய இயக்குநரிடத்திலே நேரடியாக நானே தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, இனி செய்கிற பணியிலே பாதுகாப்பை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்று அரசின் சார்பாகக் கூறியிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மேலும் இதுசம்பந்தமாக* report *வந்தவுடனேயே, நடவடிக்கை எடுக்கப்படும்.*

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

2021 செப்டம்பர் 1]

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கின்றேன்.*

5. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

(ஆ) கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை

(இ) கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

(அ) கோரிக்கை எண் 52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 52–மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*